2015 செப்டம்பர் 1]

182—

தேன் கொள்முதல்

***53123—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், பச்சைமலை பகுதிகளில் கிடைக்கும் தேனை கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி என்னுடைய பதிலை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதி, துறையூர் ஒன்றியம், பச்சைமலை பகுதிகளில் கிடைக்கும் தேனைப் பதப்படுத்தி, தரத்தின் அடிப்படையில், கதர் கிராமத் தொழில் ஆணையம் நிர்ணயித்த விலையில் கொள்முதல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைகளை சாதனைகளாக்கி, சாதனைகளை சரித்திரங்களாக மாற்றி, தமிழக மக்களுக்காகவே தன் மெய் வருத்தி, துறைகள்தோறும் மக்கள் நலத் திட்டங்கள் தந்து, தன்னலமில்லா தியாகச் சுடராய் வாழும் வள்ளல், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

துறையூர், பச்சைமலைப் பகுதியை பசுமை சுற்றுலாத் தலமாக அமைக்க ரூ.2 கோடியே 30 இலட்சம் நிதி ஒதுக்கிய மாண்புமிகு

தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர், கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட பச்சைமலையில் மலைவாழ் மக்கள் சுமார் 1,500—க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் உள்ளனர். அங்கு அதிகப்படியான தேன் உற்பத்தியாகின்றது. அந்தத் தேனைப் பதப்படுத்தாமல், நேரடியாகப் பிழிந்து, பாட்டில்களில் அடைத்து, குறைந்த விலைக்கு விற்பனை செய்கின்றனர். மேலும், அந்தத் தேன் விரைவில் கெட்டு விடுகின்றது. எனவே, அரசே நேரடி கொள்முதல் செய்து, பதப்படுத்தி, துறையூர் நகரப் பகுதியில் விற்பனை நிலையம் அமைத்துக் கொடுத்தால், மலைவாழ் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். அதைப் பயன்படுத்துகின்ற மக்களுக்கும் தரமான தேன் கிடைக்கும். எனவே, பச்சைமலைப் பகுதியில் உற்பத்தியாகும் தேன் கொள்முதல் செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

183—

மின் கம்பிகளை மாற்றியமைத்தல்

***50217—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முதலிபாளையம் ஊராட்சி, வட்டகாட்டுப்புதூரிலுள்ள அரசு தொடக்கப் பள்ளிக்கு மேலே செல்லும் மின் கம்பிகளை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?